DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 17.04.2026

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.02/2026 |
| Deposition of Witness for Prosecution | : | PW.1 |
| Name | : | ஆனந்த குமார் |
| Father Name | : | பெரியசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. E.Govindharasu, Grade III Bench Clerk, of this court, on 17.04.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

**(எதிரி ஆஜர்)**

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்(12.37.P.M.):–**

**முதல் விசாரணை:–**

நான் சேலம் மாவட்டம், ஏற்காடு காவல் நிலையத்தில் காவல் உதவியாளராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 07.02.2023–ம் தேதியன்று காலை 10.30 மணியளவில் எனது தலைமையில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சந்திரன், தலைமை காவலர் கோபால், துரைசாமி ஆகியோருடன் மதுவிலக்கு சம்மந்தமாக பெரியேரிக்காடு கிராமத்திற்கு கண்காணிக்க செல்லும்போது கல்லேரிக்காட்டைச் சேர்ந்த சுந்தர்ராஜன் என்பவரின்

தோட்டத்திலுள்ள ஆட்டுப்பட்டியில் வைக்கோல் போரில் அரசு அனுமதி பெறாமல் நாட்டுத்துப்பாக்கி வைத்திருப்பதாக ரகசிய தகவல் கிடைத்தது.

அதன்பின்னர் மேற்படி தகவலினை உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்து மேற்படி உத்தரவுப்படி வெள்ளக்கடை கிராம நிர்வாக அலுவலர் சுந்தரம் அவர்களுக்கும், ஆணைக்காடு கிராம உதவியாளர் அரசன் என்பவருக்கும் தகவல் தெரிவித்து அவர்கள் வந்ததும் பெரியேரிக்காடு ஆஜர் எதிரியின் தோட்டத்திலுள்ள ஆட்டுப்பட்டி அருகில் வைக்கோல் போரில் காவலருடன் வைக்கோல் போரை கலைத்து பார்த்தபோது இரண்டு SBML நாட்டுத்துப்பாக்கிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை கண்டுபிடிக்கப்பட்டது. அதனுடன் சுமார் 200 கிராம் கரிமருந்து மற்றும் 100 கிராம் அளவுள்ள ஈயம் மற்றும் இரும்பு சிறிய குண்டுகள் பாலிதீன் கவரில் இருந்தது.

மேற்படி தடயங்களை சாட்சிகள் சுந்தரம் மற்றும் அரசன் அவர்கள் முன்னிலையில் காலை 11.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். பின்னர் எதிரியை தேடி அக்கம் பக்கம் தேடியதில் எதிரியின் வீடு பூட்டப்பட்டிருந்தது எதிரி தலைமறைவாகியிருந்தார். பின்னர் அக்கம் பக்கத்தில் விசாரிக்கும் போது எதிரி கள்ளத்தனமாக நாட்டுத்துப்பாக்கி வைத்து இரவு நேரத்தில் வேட்டைக்கு சென்று வருவதாக சொன்னார்கள். நான் போலீஸ் பார்டிவுடன் கைப்பற்றிய தடயங்களுடன் ஏற்காடு காவல் நிலையம் வந்து ஏற்காடு காவல் நிலைய குற்ற எண்.26/2023, ச/பி. 25(1B)(A) ARMS Act மற்றும் 9B(1)(b) Explosive Act –ன் வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த முதல் தகவல் அறிக்கை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், கைப்பற்றப்பட்ட தடயங்களுடன் காவல் ஆய்வாளர் செந்தில் ராஜ் மோகன் அவர் பார்வைக்கு வைத்தேன்.

**மேற்படி வழக்கு சொத்தினை கைப்பற்றிய கைப்பற்றுதல் மகஜரானது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னிடம் காட்டப்படும் இரண்டு SBML நாட்டுத்துப்பாக்கியை நான் தான் கைப்பற்றினேன். **அந்த இரண்டு SBML நாட்டுத்துப்பாக்கியானது அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

1. 07.02.2023–ம் தேதி காலை 10.30 மணிக்கு மதுவிலக்கு ரோந்துக்கு சென்றதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் எந்த இடத்தில் செல்லும் போது வழக்கு சம்பவம் குறித்து தகவல் கிடைத்தது என்றால் சின்ன ஏரிக்காடு அருகே சென்றபோது தகவல் கிடைத்தது. மேற்படி விவரத்தினை முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சம்மந்தமாக எனக்கு தகவல் கிடைக்கப்பட்ட நேரம் என்னவென்றால் காலை 09.00 மணியாகும். தகவல் கிடைக்கப்பட்டவுடன் எனது உயர் அதிகாரிகளுக்கு அதனை தெரிவித்தேன் என்றால் சரிதான். தகவல் கிடைத்தவுடன் எப்போது சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் காலை 10.30 மணிக்கு சம்பவ இடம் சென்றேன். கிராம நிர்வாக அலுவலருக்கும் அவரது உதவியாளருக்கும் வழக்கு சம்பவம் குறித்து யார் தகவல் சொன்னது என்றால் நான் தான் தகவல் சொன்னேன்.

2. மேற்படி தகவல் எவ்வாறு கிராம நிர்வாக அலுவலருக்கும் அவரது உதவியாளருக்கும் தெரிவிக்கப்பட்டது என்றால் எனது போன் மூலம் தகவல் தெரிவித்தேன். கிராம நிர்வாக அலுவலரையும் அவரது உதவியாளரை எங்கு வரச்சொல்லி தகவல் சொன்னேன் என்றால் சின்ன ஏரிக்காடு கிராமத்திற்கு வரச்சொல்லி தகவல் சொன்னேன். கிராம நிர்வாக

அலுவலரும் அவரது உதவியாளரும் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் காலை 10.00 – 10.15 மணிக்குள் வந்தார்கள். கிராம நிர்வாக அலுவலரும் அவரது உதவியாளரும் சின்ன ஏரிக்காடு கிராமத்திற்கு வந்தபிறகு எங்கு செல்லவேண்டும் என தகவல் சொன்னேன் என்றால் கல்லேரிப்பட்டி எதிரியின் தோட்டத்தில் இருப்பதாக ஏற்கனவே தகவல் சொன்னேன். கல்லேரிப்பட்டி எதிரியின் இடம் எவ்வாறு என்னால் அடையாளம் காணப்பட்டது என்றால் ஊர் மக்கள் முன்னரே சொன்னார்கள் மற்றும் கிராம உதவியாளரும் அதனை உறுதிப்படுத்தினார்.

3. தகவல் தெரிவித்த ஊர் மக்கள் குறித்து எனது முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் ரகசிய தகவல் என்பதால் சொல்லவில்லை. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் ஆகியோரிடம் வழக்கு சம்மந்தப்பட்ட நிலம் ஆஜர் எதிரிக்கு தான் பாத்தியப்பட்டது என்பதனை உறுதிப்படுத்த ஆவணங்கள் ஏதேனும் பெற்றீர்களா என்றால் நான் பெறவில்லை. சம்பவ இடத்தில் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 பாதுகாப்பிற்காக துணி அல்லது கோணிப்பையால் சுற்றி வைக்கப்பட்டிருந்ததா என்றால் இல்லை. அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 வேட்டைக்காக எதிரியால் பயன்படுத்தப்பட்டிருந்தால் அவை பாதுகாப்பிற்காக துணி மற்றும் கோணிப்பையால் சுற்றி வைக்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 கைப்பற்றிய சமயத்தில் என்னுடன் வந்த காவலர்களிடம் சம்பவம் குறித்து புகாரோ அல்லது தனியறிக்கையோ பெற்றேனா என்றால் இல்லை.

4. சம்பவ இடத்திற்காக வந்த கிராம நிர்வாக அலுவலரின் ஆள்வரையறக்குள் சம்பவ இடம் வருகின்றது என்றால் வருகின்றது. சட்டவிரோதமாக நாட்டுத்துப்பாக்கி இருப்பதாக கிராம நிர்வாக அலுவலரிடம் எழுத்து பூர்வமான புகார் பெறப்பட்டதா என்றால் இல்லை.

முதல் தகவல் அறிக்கையில் உத்தரவின் படி கிராம நிர்வாக அலுவலரும், அவரது உதவியாரும் வந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் யாரின் உத்தரவின் படி சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் எனது மேல் அதிகாரிகளின் உத்தரவின் படி வந்தார்கள். முதல் தகவல் அறிக்கையில் சம்பவ இடத்தில் இரண்டு SBBL நாட்டுத்துப்பாக்கிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் சரிதான், மேற்படி SBBL என தவறாக தட்டச்சு ஆனதை பிழைதிருத்துவதற்காக நீதிமன்றத்தில் முதல் தகவல் அறிக்கையுடன் கடிதம் ஒன்றினை வழங்கியுள்ளேன்.

5. மேற்படி கடிதமானது வழக்கு கோப்புடன் உள்ளதா என்றால் உள்ளது. நான் மேற்சொன்னது போல எந்தவொரு வேண்டுகோள் கடிதமும் நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சம்மந்தமாக உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்திருந்த நிலையில் என்னால் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆகியவற்றை கொண்டு தணியறிக்கை ஏதேனும் எனது உயர் அதிகாரிகளுக்கு சமர்ப்பித்தேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை யாருடைய உத்தவின் பேரில் பதிவு செய்தேன் என்றால் காவல் ஆய்வாளர் உத்தரவின் பேரில் பதிவு செய்தேன். என்னால் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்படும் முதல் தகவல் அறிக்கை கனம் நீதிமன்றத்தில் எப்போது அனுப்பினேன் என்றால் பதிவு செய்த மறுநாளே கொடுத்துவிட்டேன். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 எந்த தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 27.02.2023—ம் தேதி என உள்ளது. முதல் தகவல் அறிக்கையினை 20 நாட்கள் காலதாமதமாக நீதிமன்றத்தில் சமர்ப்பித்தற்காக காரணம் என்னவென்றால் நான் நீதிமன்ற காவலரிடம் ஒப்படைத்தேன் அவர்தான் நீதிமன்றத்தில் ஒப்படைத்தார்.

6. முதல் தகவல் அறிக்கையில் எதிரி துப்பாக்கியினை பயன்படுத்தி வேட்டையாடி வந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் யாரை விசாரித்து மேற்படி தகவல் பெற்றேன் என்றால் ஊர்காரர்களை விசாரித்து தகவல் பெற்றேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் முன்னரே விசாரணையை மேற்கொண்டதாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள நிலையில் எவ்வாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யும் முன்னரே விசாரணை செய்தேன் என்றால் சம்பவம் குறித்து தகவல் பெறவேண்டியே விசாரணை செய்தேன். என்னை காவல் ஆய்வாளர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்ததில் ஆஜர் எதிரி வேட்டையாடி வந்தார் என யார் எனக்கு தகவல் கொடுத்தார்கள் என்பது குறித்து சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

7. நான் சொல்வது போல் அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆகியவை எதிரிக்கு சொந்தமான இடத்திலிருந்து கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆகியவை எதிரியின் இடத்திலிருந்து கைப்பற்றியதற்கு ஆதரவாக கிராம நிர்வாக அலுவலரிடம் வருவாய் ஆவணங்கள் ஏதேனும் பெற்றேனா என்றால் இல்லை. கிராம நிர்வாக அலுவலரோ அல்லது காவலர்களோ என்னுடன் வந்திருந்தால் அவர்களிடமிருந்து வழக்கு சம்மந்தமாக புகாரோ, அறிக்கையோ பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கானது உயர் அதிகாரிகளின் வேண்டுகோளுகிணங்க புள்ளி விவர கணக்கிற்காக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.பொ.1 மற்றும் அ.சா.பொ.2 ஆகியவை கைப்பற்றப்படாததால் தான் 07.02.2023–ம் தேதி பதிவு செய்யப்பட்ட அ.சா.ஆ.1 ஆவணமானது 20 நாட்கள் கழித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

8. எதிரியின் பூர்வீகம் ஏற்காடாக இருந்தாலும் கொல்லிமலையில் மரவேலை செய்து வாழ்ந்து வருகிறார் என்றும், எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், வழக்கு சொத்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.

**<u>அரசு தரப்பில் மறுவிசாரணை:</u>**

1. நான் 07.02.2023–ம் தேதி கனம் நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கையில் இரண்டாவது பக்கத்தில் 13, 15, 21 ஆகிய வரிகளில் SBML என குறிப்பிடுவதற்கு பதிலாக SBBL என கணினியில் தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது SBML என்பதே சரியானது என்று குறித்து வேண்டுகோள் கடிதத்தினை நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் வேண்டுகோள் கடிதமானது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. அ.சா.ஆ.1 ஆவணத்தினை மேல் விசாரணைக்காக எவ்வளவு நேரத்தில் எனது மேல் அதிகாரியிடம் ஒப்படைத்தேன் என்றால் 07.02.2023–ம் தேதி மாலை 03.00 – 04.00 மணிக்குள் ஒப்படைத்தேன். அப்போது என்னிடம் மேல் அதிகாரி விசாரணை மேற்கொண்டார் என்றால் மேற்கொண்டார். மேல் அதிகாரியின் விசாரணைக்கு பின்னிட்டு தான் அ.சா.ஆ.3 ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 07.02.2023–ம் தேதி தயார் செய்யப்பட்ட அ.சா.ஆ.3 ஆவணமானது நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் 03.05.2023–ம் தேதியன்று நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. இறுதி அறிக்கை தயார் செய்ததன்

பின்னிட்டே அ.சா.ஆ.3 ஆவணமானது தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)**

**(விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 01.44.P.M)**

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

R ELANCHEZHIAN

Digitally signed by R ELANCHEZHIAN
Date: 2026.04.17 13:46:14 +0530

District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.